**செய்தி வெளியீடு எண் : 1396** **நாள் : 23.12.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

**தமிழ்நாடு புத்தொழில் ஆதார மானியத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 19 புத்தொழில் முனைவோர்களுக்கு முதல் தவணை மானியத்திற்கான காசோலைகள் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (23.12.2021) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்படும், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் சார்பில் தமிழ்நாடு புத்தொழில் ஆதார மானியத்திற்கு, டான்சீட் இரண்டாம் பாகத்தில் (TANSEED 2nd Edition) தெரிவு செய்யப்பட்ட 19 புத்தொழில் நிறுவனங்களுக்கு, முதல் தவணை மானியத் தொகையாக தலா 5 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 95 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வேலை உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றுகின்றன. இவை அளவான முதலீட்டில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வாதார மூலங்களை வழங்கி ஒட்டுமொத்த சமூக - பொருளாதார மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கும் பெரும்பங்களிப்பு செய்து வருகின்றன. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டினை உலகளாவிய புத்தாக்க மையமாகவும் (Startup Hub), புத்தொழில் முனைவோர்களுக்கான மிகச்சிறந்த தேர்விடமாகவும் உருவாக்க வேண்டும் என்பதே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டமாகும்.

புத்தொழில்களுக்கு, உந்து சக்தியாகவும், வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான துடிப்பான தொடக்க சூழலை கட்டமைப்பதற்கும், புத்தாக்கத்தால் தமிழ்நாட்டில் பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்தவும்,

தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (**Tamilnadu Startup and Innovation Mission**) எனும் **TANSIM** வழிவகுக்கிறது.

அதன் அடிப்படையில், புத்தொழில் கலாச்சாரத்தை (Startup Culture) மேம்படுத்தும் வகையில் “டான்சிம்” நிறுவனம், ஒரு முதன்மை முயற்சியாக,“**TANSEED”** எனும் தமிழ்நாடு புத்தொழில் ஆதார மானிய உதவித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், புத்தொழில் முனைவோர்கள் தங்கள் நிறுவனத்தின் ஆரம்ப நிலைகளை சிறப்பாக வடிவமைக்க, மானிய உதவியாக ரூபாய் 10 இலட்சம் வரை டான்சிம் நிறுவனம் வழங்குகிறது.

புத்தொழில் முனைவோருக்கான மானியம் வழங்கும் திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை 640 விண்ணப்பங்கள் இணையதளம் வாயிலாக பெறப்பட்டு தீவிர தேர்வு செயல்முறையின் அடிப்படையில் (Bootcamp, Pitching) உயர்மட்ட நிபுணர் குழுவால் கீழ்க்கண்ட 19 புத்தொழில் நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

| **வ. எண்** | **புத்தொழில் நிறுவனத்தின் பெயர்** | **துறை** | **தொழில் செயல்பாடுகள்** |
|---|---|---|---|
| 1 | கேம்பிரியோனிக்ஸ் லைப் சயின்ஸ் பிரைவேட் லிமிடெட் (பையோடா) | உயிரியல் தொழில்நுட்பம் | உயிரியல் கற்றல் பேழைகள் |
| 2 | டெராலுமென் சொல்யுசன்ஸ் பிரைவேட் லிமிடெட் | உயிரியல் தொழில்நுட்பம் | புற்றுநோயை கண்டறியும் உயர் தொழில்நுட்ப மருத்துவ சாதனங்கள் |
| 3 | ஹலோ 24 டிஜிகாம் பிரைவேட் லிமிடெட் | சி - வர்த்தகம் | மின் வணிக உரையாடல் தளம் |
| 4 | எஸ்எம்பி ஸ்யுர் பிசினஸ் சொல்யுசன்ஸ் பிரைவேட் லிமிடெட் (கோபுளோடர்ஸ்) | பணிபுரியும் இடங்கள் | தேவைக்கேற்ப அலுவலக இடங்களை இணையதள வாயிலாக வழங்கும் தளம் |
| 5 | ஒசோன் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் | மின்சார வாகனம் | அனைத்து வகை மின்சார வாகனங்கள் தயாரித்தல் |
| 6 | டோரஸ் ரோபாட்டிக்ஸ் பிரைவேட் லிமிடெட் | மின்சார வாகனம் | மின்சார மோட்டார்கள் வடிவமைப்பு மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | மேம்பாடு |
| 7 | ரைசல் ஆட்டோமோட்டிவ் பிரைவேட் லிமிடெட் | மின்சார வாகனம் | மின்சார மோட்டார்கள் |
| 8 | இமோட் எலக்ட்ரிக் பிரைவேட் லிமிடெட் | மின்சார வாகனம் | மின்சார இரு சக்கர வாகனங்கள் |
| 9 | டுக்கார் புட் அண்ட் பெவரேஜஸ் பிரைவேட் லிமிடெட் (போல்கா பாப்) | உணவு மற்றும் பானங்கள் | கலோரி மற்றும் சர்க்கரை அல்லாத மணம் நிறைந்த குளிர் பானங்கள் |
| 10 | கோ கிலி டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (மைண்ட் & மாம்) | சுகாதார தொழில்நுட்பம் | கர்ப்பிணி பெண்களுக்கான பிரத்யேக மின்தளம் |
| 11 | கெம்பயோசென்ஸ் பிரைவேட் லிமிடெட் | சுகாதார தொழில்நுட்பம் | உடல் ஆரோக்கிய பராமரிப்பு, சுற்றுசூழல் கண்காணிப்பு, மருந்து மற்றும் வேதிப்பொருட்கள் தொழிலகங்களுக்கான ஆராய்ச்சி மற்றும் திறன் கண்டறியும் தொழில்நுட்பம் |
| 12 | தீரா ரீஹபிலிடேஷன் சொல்யுசன்ஸ் பிரைவேட் லிமிடெட் | சுகாதார தொழில்நுட்பம் | மறுவாழ்வு மற்றும் உடல் இயக்க தீர்வுக்கான தொழில்நுட்பம் |
| 13 | தேவ் பீடெக் இந்தியா பிரைவேட் லிமிடெட் ( கோ பஸ்ஸர் ) | பொருட்களின் இணையம், (IoT) | தேன் கூடுகளை கண்காணிக்கும் IOT தொழில் நுட்பத்தை அடிப்படையாக கொண்ட நுண்ணிய மற்றும் திறன் வாய்ந்த கருவிகள் |
| 14 | காஸ்க்ரிட் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் | இணைய வழி இணைப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு, (Networking and Cyber security) | கிளவுட் மற்றும் IOT தொழில்நுட்பம் |
| 15 | சைமா அனலிடிக்ஸ் பிரைவேட் லிமிடெட் | பொருட்களின் இணையம், (IoT) | சென்சார்கள் வடிவமைத்தல் மற்றும் தயாரிப்பு |

| | | | |
|---|---|---|---|
| 16 | சோலினாஸ் இன்டகிரிட்டி பிரைவேட் லிமிடெட் | ரோபாட்டிக்ஸ் | தொழிற்சாலை குழாய்கள் மற்றும் தொட்டிகளை பகுப்பாய்வு மற்றும் முன்கணிப்பு செய்யும் ரோபோடிக் தொழில்நுட்பங்கள் |
| 17 | டிஜிட் பிசினஸ் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் | மென்பொருள் சேவை, (SaaS) | வர்த்தகத்தை மேம்படுத்த மென்பொருள் சேவை (SaaS) தளம் |
| 18 | பாக்ஸ்பைல் வெப் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் | மென்பொருள் சேவை, (SaaS) | பட்டய கணக்காளர்களுக்கான கிளவுட் தணிக்கை தளம். |
| 19 | மேங்கோலீப் பிரைவேட் லிமிடெட் (கல்லாபாக்ஸ்) | மென்பொருள் சேவை, (SaaS) | வாடிக்கையாளர்கள் தொடர்புகளுக்கான வாட்ஸ் அப் உரையாடல்கள் தளம் |

இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேற்காணும் 19 புத்தொழில் நிறுவனங்களுக்கு, மானியத் தொகையாக ரூபாய் 10 இலட்சம் வரை வழங்கிடும் வகையில், முதல் தவணையாக தலா 5 இலட்சம் ரூபாய், என மொத்தம் ரூபாய் 95 இலட்சத்திற்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திரு. வி. அருண் ராய், இ.ஆ.ப., டான்சிம் இயக்க இயக்குநர் திருமதி. சிஜி தாமஸ் வைத்யன், இ.ஆ.ப., தொழில் வணிகத் துறை கூடுதல் இயக்குநர் திரு. இரா. ஏகாம்பரம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

.............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**